செ. கு. எண்:46 நாள்: 21.02.2021

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை – 21 .2.2021**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெரிய வீரசங்கிலி கிராமத்தைச் சேர்ந்த திரு. மோகன்ராஜ் என்பவரின் மகள் செல்வி தேன்மொழி என்பவர் தனது வீட்டின் முன்பு பந்தல் கயிற்றில் துணிகளை காயவைக்கும் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், செட்டியாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. மெய்யர் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், ஏழுதேசம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஷீலா என்பவரின் கணவர் திரு. சுரேஷ் என்பவர் பந்தல் அமைக்கும் பணியின் போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விளவங்கோடு வட்டம், நட்டாலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னையன் என்பவரின் மகன் திரு. சுந்தரதாஸ் என்பவர் கடையில் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், புளியந்தோப்பு கிராமத்தைச் சேர்ந்த திருமதி பிரேமா என்பவரின் கணவர் திரு. ராஜி என்பவர் புல் தரையை பராமரிக்கும் பணியின் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், கிழக்கு சித்திரைச் சாவடி கிராமத்தில், திரு. கருப்பசாமி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பொள்ளாச்சி வட்டம், சூளேஸ்வரன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமலைசாமி என்பவரின் மகன் திரு. பேச்சிமுத்து என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியின் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பச்சாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீரங்ககவுண்டர் என்பவரின் மகன் திரு. ராமசாமி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், எம்.ஜி.ஆர் நகரைச் சேர்ந்த திரு. சிவன் என்பவரின் மகன் திரு. சக்தி என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தென்தாமரைகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.மிகாவேல் என்பவரின் மகன் திரு. யோபு என்பவர் எதிர்பாராத விதமாக மின் கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், செல்லிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பண்ணாரி என்பவரின் மகன் திரு. நாகராஜ் என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், தாளமுத்து நகரைச் சேர்ந்த திரு. செந்தூர்பாண்டி என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியின் போது, தவறி விழுந்து காயமடைந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், எர்ணாவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் என்பவரின் மகன் திரு. விக்னேஷ் என்பவர் கட்டுமானப் பணியின் போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மின்சாரம் தாக்கியும், பாம்பு கடித்தும் உயிரிழந்த 13 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 13 **நபர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**